21.08.2025

**CC No.19/2025**
**ம.சா.1 புஷ்பம், க/பெ.ஜோசப்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) 2020ல் இருந்து எதிரி வீட்டில் குடியிருப்பதாக குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள விபரத்தை எனது நிரூபண வாக்குமூலம் மற்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கையெழுத்தை புஷ்பம் என்று தான் செய்வேன் என்றால் சரிதான். எனது கணவர் ஜோசபின் அப்பா பெயர் மனுவேல். என் கணவர் மாணிக்கம் மனைவி கயல்விழி என்பவரிடம் கொடுத்த கடனை திருப்பி கேட்டதற்காக அவர் மீது வடக்கு காவல் நிலையத்தில் கு.எண். 48/2019 என்ற எண்ணில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு காரைக்குடி நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். கயல்விழி என்பவர் எதிரியின் தங்கை என்றாலும், மாணிக்கம் என்பவர் அவரது கணவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாணிக்கம் என்பவருக்கும் என் கணவருக்கும் கார் வாங்குவது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனையில் மாணிக்கம் மனைவி கயல்விழி என்பவருடன் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி மாணிக்கம் மற்றும் கயல்விழி ஆகியோர் நகை , பணம் பல்வேறு நபர்களிடம் மோசடி செய்ததாக காரைக்குடியை சேர்ந்த பொதுமக்கள் தொடர்பாக புகார் அளித்த விபரம் எனக்கு தெரியாது.

2) நான் மேற்படி மாணிக்கம் மீதோ அவர் மனைவி மீதோ எங்கும் புகார் அளிக்கவில்லை. எனது மொபைல் நம்பர் 8825736682 என்றால் சரிதான். கடந்த 22.07.2020ம் தேதி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மேற்படி மாணிக்கம் மற்றும் அவரது மனைவி கயல்விழி மீது தங்க கட்டிகளை குறைந்த விலையில் வாங்கி தருவதாக மோசடி செய்து என்னிடம் இருந்து பல் வேறு தவணைகளில் ரொக்கமாக ரூ. 11 லட்சம் பணமும், 56 சவரன் தங்க நகையையும் வாங்கி ஏமாற்றியதாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார் எதுவும் அளிக்கவில்லை. மேற்கண்ட வகையில் புகார் அளித்துள்ளேன் என்றும் அது சம்பந்தமாக என் கணவர் ஜோசப் கேட்டதற்குதான் கயல்விழி மற்றும் மாணிக்கத்துடன்

பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது வழக்கில் 22 பவுன் தங்க நகைகளுக்கு ரூ.7 லட்சம் என்று நான் உத்தேசமாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான நகை மதிப்பீட்டு சான்று எதுவும் இல்லை. நான் கொடுத்த 22 பவுன் தங்க நகைகளுக்கு பதிலாக ஏன் காசோலையாக பெற்றேன் என்ற விபரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன்.

3) நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்பாகவில்லை என்றால் நான் அனுப்பினேன் அவர் வாங்கவில்லை. கயல்விழி மற்றும் மாணிக்கம் என்பவர்களுக்கு கொடுத்த கடனிற்காக அவர்கள் வசம் இருந்த எதிரியின் காசோலையை பூர்த்தி செய்து எதிரி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வழக்கறிஞர் அறிவிப்பு சார்பாகாத காரணத்தால் இந்த வழக்கில் கொடுத்ததாக சொல்லப்படும் காலாவதி கடன் என்பதால் இந்த வழக்கானது நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த வித கடனும் கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றாலும் எதிரி குற்றவாளி இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.21 13:30:14 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)